உ
சிவமயம்

# மலேசிய இலங்கைச் சைவர் சங்கம்
## Malaysian Ceylon Saivites Association
# ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

எண். 3, ஜாலான் தெபிங் (லோரோங் ஸ்கொற்), கோலாலம்பூர். No.3, Jalan Tebing (Lorong Scott), Kuala Lumpur.
website : www.srikandaswamykovil.org e-mail : enquiries@srikandaswamykovil.org



**விநாயகர் துதி**
மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுதலுடைய தோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்



**ஷண்முகர் துதி**
முவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி



**அம்பாள் துதி**
தனந்தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே!

## ஸ்ரீ வரலட்சுமி விரதம் தீப பூஜை (திருவிளக்குப் பூஜை)

மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான விளம்பி வருஷம் ஆவணி மாதம் 8-ம் திகதி (ஆங்கிலம் 24.8.2018) வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு நமது ஆலயத்தில் விசேஷ அபிஷேகம், பூஜை, தீப பூஜை ஆகியன சிறப்பாக நடைபெறவுள்ளது. அடியார்கள் யாவரும் இவ்வைபவங்களில் கலந்து தரிசித்து திருவருளும், அஷ்ட ஐஸ்வர்ய லட்சுமி கடாட்சமும் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

### நிகழ்ச்சி நிரல்

**24.8.2018 வெள்ளிக்கிழமை**

மாலை 4.00 மணி - விநாயகர் வழிபாடு, கும்ப பூஜை, ஹோமம், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு ஸ்நபனாபிஷேகம்.
மாலை 5.30 மணி - சாயங்காலப் பூஜை; ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் விஷேச பூஜை
மாலை 7.00 மணி - தீப பூஜை, (திருவிளக்குப் பூஜை)
அபிஷேக உபயம் - திரு. சோ. இராஜரத்தினம் குடும்பம்
தீப பூஜை உபயம் - திரு. இரத்தினம் சிவநாதன் குடும்பம்
இரவு 9.30 மணி - அர்த்தஜாமப் பூஜை

தீப பூஜையில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ஆலயக் காரியாலயத்தில் 21.8.2018க்கு முன் இருபத்தொரு வெள்ளி **(RM21)** பணம் கொடுத்து தமது நட்சத்திரம், பெயர் ஆகியனவற்றைப் பதிவு செய்து கொள்ளவும். தீப பூஜையில் கலந்து கொள்பவர்கள் ஒரு தாம்பாளத்தில் (தட்டம்) உதிரிப்பூக்கள் மட்டும் எடுத்து வரவேண்டும். மற்றும் தீப பூஜைக்கு வேண்டிய தலை வாழை இலை, அரிசி, குத்துவிளக்கு, திரிநூல், தேங்காய் எண்ணெய், பட்டு, பூச்சரம், குங்குமம், டம்ளர், கரண்டி, பிரசாதம், காளாஞ்சி ஆகிய அனைத்துப் பொருட்களும் ஆலயத்தில் வழங்கப்படும். தீப பூஜையில் கலந்து கொள்பவர்கள் மாலை 6.30 மணிக்கு முன்னர் ஆலயத்திற்கு வருகை தரும்படி வேண்டுகிறோம்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

விளம்பி வருஷம்
ஆடி மாதம் 28-ம் திகதி
(13.8.2018)

ஆ. தருமநாதன்
**ஆறுமுகம் தருமநாதன்**
(கௌரவ காரியதரிசி)

SIVAMAYAM

# PERSATUAN CEYLON SAIVITES MALAYSIA

## Malaysian Ceylon Saivites Association

## ஸ்ரீ கந்தசுவாமி கோவில் / *SRI KANDASWAMY KOVIL*

எண். 3, ஜாலான் தெபிங் (லோரோங் ஸ்கொற்), கோலாலம்பூர். No.3, Jalan Tebing (Lorong Scott), Kuala Lumpur.
website : www.srikandaswamykovil.org e-mail : enquiries@srikandaswamykovil.org





## *SRI VARALAKSHMI VIRATHAM-THIRUVILAKKU POOJA*

*Dear Devotees,*

*The Varalakshmi Viratham will be observed at the Sri Kandaswamy Kovil on Friday 24th August 2018 (8th Day of Aavani) with special abishegam, pooja and Thiruvilakku Pooja. Goddess Lakshmi bestows wealth and material prosperity on all Her devotees.*

*On this auspicious day the Thiruvilakku Pooja will be held in the evening and devotees are invited to participate and receive the blessings of Sri Rajarajeswari Ambal.*

### PROGRAMME

***Friday 24.8.2018***

| | | |
|---|---|---|
| ***4.00 p.m*** | - | ***Snabana Abishegam for Sri Rajarajeswari Ambal*** |
| ***5.30 p.m*** | - | ***Evening Pooja; Special Pooja for Sri Rajarajeswari Ambal*** |
| ***7.00 p.m*** | - | ***Thiruvilakku Pooja*** |
| ***9.30 p.m*** | - | ***Arthajama Pooja*** |

***Note:*** *Those who wish to participate in the Thiruvilakku Pooja may register at the temple before 21.8.2018 (**RM21.00**). Devotees participating in the Thiruvilakku Pooja are required to bring only a tray of loose flowers. All other items will be provided by the Temple:- banana-leaf, rice, kuthuvilakku, wick, oil, cloth (pattu), garland, kumkum, tumbler, spoon, prasatham, kalanchi etc. Those participating in the Thiruvilakku Pooja are requested to be at the temple by 6.30 p.m*

**Abishega Ubayam** - **Sri S. Rajaratnam and Family**
**Theeba Pooja Ubayam** - **Sri Retnam Sivanathan and Family**

***"May the elevating Saiva Dharma Illuminate the Whole World"***

*Tamil Year Vilambi*
*28th Day of Aadi*
*(13.8.2018)*

**A. THARUMANATHAN**
***Hon. Secretary***